2022 ஜனவரி 7] [திரு. மு.க. ஸ்டாலின்]

முறையாக, படிப்படியாக, அதற்கென்ன தேவை, எது முதலில், எது இரண்டாவது, எது மூன்றாவது என்ற priority தேவை." எல்லோரும் எளிதாகப் புரிந்துகொள்ளும்படியான பேரறிஞர் அண்ணா அவர்களின் விளக்கத்தை அனைவரும் ஆய்ந்து சிந்தித்துப் பார்த்து ஏற்க வேண்டும் என்று நான் மிகுந்த அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சொன்னதை மட்டும் செய்யாமல், சொல்லாததையும் செய்யக்கூடிய அரசுதான் இந்த அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையில், சில முக்கிய சாதனைகளை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கொரோனா பரவல் காரணமாக குழந்தைகள் பள்ளிகளில் படிக்க முடியாததால் கற்றல் இழப்புப் பிரச்சினை பெற்றோர்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியது. அந்தக் கவலையைப் போக்க வந்ததுதான் "இல்லம் தேடி கல்வி" என்கிற திட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) 200 கோடி ரூபாய் மதிப்பில் தொடங்கப்பட்ட இந்தத் திட்டம், 12 மாவட்டங்களில் முன்மாதிரி அடிப்படையில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. 80 ஆயிரத்து 138 இல்லம் தேடி கல்வி மையங்கள் தொடங்கப்பட்டிருக்கின்றன. பல்வேறு துறைகளைச் சேர்ந்த 80 ஆயிரம் அலுவலர்களைப் பயன்படுத்தி, ஜி.பி.எஸ். செயலி வாயிலாகக் கணக்கெடுத்து, இன்றைக்கு 1 இலட்சத்து 73 ஆயிரத்து 792 இடைநின்ற குழந்தைகள், அவரவர் வயதுக்கு ஏற்ற வகுப்புகளில் வெற்றிகரமாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

"மக்களைத் தேடி மருத்துவம்" என்கிற மகத்தான திட்டம்; மருத்துவச் சேவையை மக்களின் இல்லத்திற்கே கொண்டு சேர்க்கின்ற திட்டம்தான் இது. 257 கோடி ரூபாய் மதிப்பில் தொடங்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் 43 இலட்சத்து 66 ஆயிரத்து 518 பேர் பயனடைந்திருக்கிறார்கள். மாநிலமெங்கும் மருத்துவ முகாம்கள் நடத்தி, இந்த முன்னோடித் திட்டம், இன்றைக்கு மக்களின் "இல்ல மருத்துவமனைகள்" போல செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கப் பள்ளிக்கூடங்களை அனைவரும் விரும்பும் பள்ளிக்கூடங்களாக மாற்றிட இந்த அரசு முனைப்போடு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. நான், சென்னை மாநகர மேயராக இருந்தபோது மாநகராட்சிப் பள்ளிகளை அந்தளவுக்குத் தரம் உயர்த்தி, நான் மேம்படுத்தினேன் என்பது உங்களுக்கே தெரியும். அதேபோல,